உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 16.08.2026 • மலர் 04 • இதழ்: 228 • ஞாயிறு • Edition : Nagercoil • 16.08.2026 • Vol : 04 • Issue : 228 • Page : 4 • Rs. 5/-

## 80வது சுதந்திர தினம்

# சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடி ஏற்றினார் முதல்வர் விஜய்







சென்னை: நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தள்தில் முதல்வர் விஜய் தேசியக் கொடியை ஏற்றினார்.

முன்னதாக, காவல் வாகனங்கள் புடைசூழ புனித ஜார்ஜ் கோட்டைக்கு முதல்வர் விஜய் வருகை தந்தார். அவரை தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர். இதையடுத்து, முப்படை உயர் அதிகாரிகளை முதல்வர் விஜய்க்கு, தலைமச் செயலர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக முதல்வர் விஜய்க்கு காவல் துறை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அணிவகுப்பை பார்வையிட்ட முதல்வர் விஜய், சுதந்திர தின விழாவில் பங்கேற்க வருகை தந்துள்ள சபாநாயகர், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரையும் கைகூப்பி வரவேற்றார்.

இதனையடுத்து, கோட்டை கொத்தளத்துக்குச் சென்ற முதல்வர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, கொடிக்கு மரியாதை செலுத்தினார். அப்போது தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

விழாவில், முதல்வர் விஜய்யின் தாய் சோபனா, தந்தை சந்திரசேகர், நடிகை த்ரிஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவில் சிறப்புரையாற்றிய முதல்வர் விஜய், “அனைவருக்கும் சுதந்திர தின நல் வாழ்த்துகள். தங்கள் உயிரை, உடமை, வாழ்க்கையை இழந்து நமக்காக சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த சுதந்திரப் போராட்ட தியாகிகள், இதில் பிரபலமானவர்கள், பெயர் தெரியாதவர்கள் என ஒவ்வொருவருக்கும் எனது வீர வணக்கங்கள்.

நாம் அடிமைப்பட்டுள்ளோம் என்ற எண்ணம் வந்தாலே மக்களிடையே ஒரு ஒற்றுமை வந்துவிடும். எல்லோரும் ஒரே மாதிரியாக யோசித்து ஒன்று சேர ஆரம்பிப்பார்கள். அப்படி ஒன்று சேரக்கூடிய இடத்தில்தான் சாதி உடையும், மதம் உடையும், மொழி, இனம் என எல்லாமே உடைந்து நொருங்கும்.

அப்படி உடைந்து நொருங்கக்கூடிய இடத்தில் இருந்து கிடைப்பதுதான் உண்மையான சுதந்திரம். அப்படித்தான் நமது மகாத்மா காந்தி தலைமையில் 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி நமக்கு சுதந்திரம் கிடைத்தது. இன்று நாம் அந்த சுதந்திரத்தை கெட்டியாக பிடித்துக்கொண்டு படிப்படியாக முன்னேறி வந்து கொண்டிருக்கிறோம். இந்த முன்னேற்றத்தை நாம் அடுத்தடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமையும்கூட.

நமது தமிழ்நாட்டை லஞ்சம் மற்றும் ஊழலில் இருந்து காப்பாற்றுவதும் விடுதலைக்குச் சமமான ஒரு விஷயம்தான். அதை நோக்கித்தான் நமது அரசு செயல்பட்டு வருகிறது.

386 ஆண்டு பழமையான இந்த கோட்டையில், இந்த 80வது சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை ஏற்றவும், உங்கள் மத்தியில் உரையாற்றவும் எனக்கு நீங்கள் வாய்ப்பை அளித்திருக்கிறீர்கள். அதற்காக, உலகம் முழுவதும் உள்ள எனது தமிழ் சொந்தங்களுக்கும் தமிழ்நாட்டு மக்களும், ஜென்சி இளம்சிங்கப்படை தோழர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கோட்பாட்டை அடிப்படையாக வைத்துத்தான் தமிழ் நாட்டை லஞ்சம் லாவண்யம் அற்ற, போதைப் பொருள் கலாச்சாரம் இல்லாத, பெண்கள் பாதுகாப்பு, சமூக நீதி அடிப்படையில் வெளிப்படையான, நேர்மையான, உண்மையான நிர்வாகத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம்.

பொதுவாழ்வில் சமரசம் இருக்கவே கூடாது; மக்கள் நலன்தான் மிக மிக முக்கியம். அந்த அடிப்படையில்தான் தவெக அரசு செயல்பட்டு வருகிறது. அதே அடிப்படையில்தான் மக்கள் நலன்சார்ந்த திட்டங்களில் நாம் மத்திய அரசோடு நிர்வாக ரீதியாக ஒத்துழைப்போடு இருக்கிறோம். அதே நேரத்தில் தமிழ்நாடு நலன் சார்ந்த விஷயங்களில் மாநில அரசுக்கு எதிரான மத்திய அரசின் முடிவுகளை தவெக அரசு எப்போதும் எதிர்க்கும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

முந்தைய ஆட்சிக்காலங்களில் கொண்டு வரப்பட்ட மக்கள் நலத் திட்டங்களை நமது அரசு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உதாரணத்துக்கு அம்மா உணவகம் திட்டம். இந்த திட்டத்தை நாம் இன்னும் மெருகேற்றி வருகிறோம். அதேபோல், காலை உணவு திட்டத்தை 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தி வரும் செப்டம்பர் 17ம் தேதி பெரியார் பிறந்த நாளில் தொடங்க இருக்கிறோம்.” என தெரிவித்தார்.

# கோவையில் எச் எம் எஸ் தொழிலாளர் சங்கம் சார்பில் சுதந்திர தின விழா




கோவை ஆக:16 கோவை சிங்காநல்லூர் தலைமைச் சங்க அலுவலகம் முன்பு 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தேசிய கொடியை சங்க தலைவரும், எச்எம்எஸ் மாநில செயல்தலைவருமான டி எஸ் இராஜாமணி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மேலும் மகாத்மா காந்தி திருவுருவப்படத்திற்கு புகழஞ்சலி செலுத்தி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் பொருளாளரும், மாநில எச்எம்எஸ் துணைத்தலைவருமான ஜி மனோகரன் முன்னிலை வகித்தார். அதனைத் தொடர்ந்து உடையாம்பாளையம் சங்க அலுவலகம், இருகூர் கிளைசங்க அலுவலகம், பட்டணம் கிளை மற்றும் இதரசங்க கிளை அலுவலகங்கள் முன்பும் தேசிய கொடியேற்றி இனிப்புகள் வழங்கப் பட்டது.

கோவை மண்டல கட்டுமானத்தொழிலாளர் எச்எம்எஸ் சங்கம், தியாகி என்ஜிஆர் எச்எம்எஸ் பொதுத்தொழிலாளர் சங்கத்தின் சார்பாக தொப்பம் பட்டிஜங்கம்நாயக்கன்பாளையம் கிளை சங்க அலுவலக திறப்பு விழா, சுதந்திர தின கொடியேற்று விழா, பெயர் பலகை திறப்பு விழா நடைபெற்றது.

உடன் கோவை ஜில்லா பஞ்சாலைத்தொழிலாளர் சங்கத்தின் செயலாளர்கள் எஸ் தேவராஜன், கே. மோகன்ராஜ், துணைத்தலைவர் கே.பழனிசாமி, உதவிச் செயலாளர் வி கே தங்கராஜ், கோவை மண்டல கட்டுமான, தியாகி என்ஜிஆர் எச்எம்எஸ் தொழிலாளர் சங்கத்தின் செயல் தலைவர் எம்.பழனிசாமி, இணைப்பொதுச் செயலாளர் பி.காளிமுத்து, துணைத்தலைவர் கே.கிருஷ்ணசாமி, பொருளாளர் எம்.ரவீந்திரன், செயலாளர் ஜி.சாந்தி, அமைப்புச்செயலாளர்கள் டி.வி ஜயன், கே.முருகேசன், துணைச் செயலாளர் கே.முருகேசன் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஜி.துரைராதாகிருஷ்ணன், பி.கோவிந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சி இறுதியில் கட்டுமானத்தொழிலாளர் பொருளாளர் எம்.பழனிசாமி நன்றிரையாற்றினார்.



வேலூர்மாவட்டம் வேலூர் ஊராட்சி ஒன்றியம் பூதூர் ஊராட்சியில் 80.வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம்ஊராட்சி மன்ற தலைவர் கவிதா சிவகுமார். தலைமையில். துணைதலைவர்விஜய்பாலன்.ஊராட்சிசெயலர்நந்தகுமார்முன்னிலையில்நடைபெற்றகிராமசபா கூட்டத்தில் பற்றாளர் வட்டார வளர்ச்சி அலுவலக உதவி பொறியாளர் தமிழ்ச்செல்வி, ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பத்மா. தனலட்சுமி. உஷா .ஜெகநாதன். திருமால் .கோவிந்தம்மாள். சக்தி. நைல் நதி. நாகரத்தினம்.உள்ளிட்ட அரசு அலுவலர்கள் ஊர் பொதுமக்கள் பெரியோர்கள் கலந்து கொண்டனர் நடந்த கிராமசபா கூட்டத்தில் விக்ஷித் பாரத் கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் (VBG RAM G) 20262027. ஆம்ஆண்டிற்கானவேலைகள் நடைபெறுவது குறித்து கிராமசபாவின்பார்வைக்கு2.குடிநீர்பெருவிளக்குமற்றும்ஊராட்சிகளுக்கானஅடிப்படைவசதிகள் குறித்து விவாதிக் கபட்டது மேலும் இக்கூட்டத்தில் அங்கன்வாடி சுகாதார உணவு பொருட்கள் வழங்கல் மத்திய உணவு திட்டம் வேளாண்மை தோட்டக்கலைத்துறைபால் வளம் மீன்வளத்துறை மற்றும்இதரஅனைத்துதுறைகளஅலுவலர்கள்கலந்துகொண்டுதுறைசம்பந்தப்பட்டவிவரங்களை விவாதித்தனர்



தூத்துக்குடி ஸ்பிக் நகர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 80வது சுதந்திர தின விழா இன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் உரங்கள் குழுமத்தின் தொழில்நுட்ப இயக்குநர் செந்தில்நாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பள்ளி வளாகத்தில் மூவர்ணத் தேசியக் கொடியை ஏற்றி வைத்த அவர், மாணவர்களின்கம்பீரமானஅணிவகுப்புமரியாதையைஏற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார்.

விழாவில்பள்ளிமாணவமாணவிகளின்பல்வேறுகலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன. மாணவர்கள் ஒன்றிணைந்து பாடிய தேசப்பற்றுப் பாடலும், தமிழர்களின் பாரம்பரியக் கலையான பரதநாட்டிய நடனமும் விழாவிற்கு முத்திரை சேர்த்தன. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாணவர்கள் ஆற்றிய நயமான உரைகளும், உணர்ச்சிமிக்கக் கவிதைகளும் பாராட்டைப் பெற்றன. குட்டிச் சுட்டிகள் தேசத் தலைவர்களைப் போல் வேடமணிந்து மேடையில் பேசியது அனைவரின் மனதையும் கவர்ந்தது. இந்நிகழ்ச்சியில் பள்ளிச் செயலாளர் டிவிஎஸ் பிரேம்சந்தர், பள்ளித் தலைமையாசிரியர்எல்.பாபுராதாகிருஷ்ணன், ஸ்பிக்மற்றும்கிரீன்ஸ்டார் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.




கிள்ளியூர் பேரூராட்சியில் 80 வது சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றது. நிகழ்சிக்கு பேரூராட்சி தலைவர் ஷீலா சத்யராஜ் தலைமை வகித்து சுதந்திரக்கொடி ஏற்றி வைத்தார். துணை தலைவர் சத்யராஜ், செயல் அலுவலர் தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள், பேரூராட்சி அனைத்து பணியாளர்கள், பொதுமக்கள் ஏராளம் பேர் கலந்து கொண்டனர். முடிவில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.



தூத்துக்குடி ஸ்பிக் நகர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 80வது சுதந்திர தின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.இவ்விழாவில் உரங்கள் குழுமத்தின் தொழில்நுட்ப இயக்குநர் செந்தில்நாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பள்ளி வளாகத்தில் மூவர்ணத் தேசியக் கொடியை ஏற்றி வைத்த அவர், மாணவர்களின் கம்பீரமான அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார். ,விழாவில் பள்ளி மாணவமாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன. ,



கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பதிச்சாரம் அரசு உயர்நிலை பள்ளி வளாகத்தில் சுதந்திர தினம் முன்னிட்டு சிறப்பு கிராமசபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.



கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில், நடைபெற்ற 80 வது சுதந்திர தின விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்து, சமாதான புறா மற்றும் மூவர்ண பலூன்களை பறக்க விட்டார். உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .கோ.ச.அனிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



புதுக்கடை அருகே தவிட்டவிளையில் ஸ்ரீ கிருஷ்ணா மெட்ரிக் பள்ளி அமைந்துள்ளது. இந்த பள்ளியில் சுதந்திர தின விழா நடைபெற்றது. பள்ளி தாளாளர் சுந்தரராஜ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் சுசிலா முன்னிலை வகித்தார். துணை மேஜர் ரமேஷ் தேசிய கொடியேற்றினார். தொழிலதிபர் ரமேஷ் ராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ மாணவிகள், பெற்றோர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கோட்டை பத்ரகாளியம்மன் கோவிலில் பிரம்மாண்ட விளக்கு பூஜை



ஈரோடு ஆகஸ்ட் 16 ஈரோட்டில் புகழ்பெற்ற ஸ்ரீ கோட்டை பத்ரகாளி அம்மன் திருக்கோவிலில் கோவில் கமிட்டி சார்பாக ஆடி மாதம் முழுவதும் பல்வேறு சிறப்பு வழிபாடுகளும் ஆன்மீக நிகழ்ச்சிகளும் வெகுவிமரிசையாக நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, ஆடி மாதத்தின் மிக முக்கிய நாளான கடைசி ஆடி வெள்ளிக்கிழமை அன்று கோவில் வளாகத்தில் பிரம்மாண்ட விளக்கு பூஜை சிறப்புற நடைபெற்றது.

இச்சிறப்பு விளக்கு பூஜையில் 550க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு, விளக்கேற்றி அம்மனை மனமுருகி வழிபட்டனர்.

பூஜை நடைபெற்ற நேரத்தில் மழை பெய்த போதிலும், அதனை சிறிதும் பொருட்படுத்தாமல் திரளான பெண்கள் வருகை தந்து தீவிர பக்தியுடன் பூஜையில் பங்கேற்றது அப்பகுதி மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் பேசுபொருளையும் ஏற்படுத்தியது.

இக்கோவிலில் நடைபெறும் இந்த விளக்கு பூஜையில் தொடர்ந்து பங்கேற்று அம்மனை வழிபடுவதால் தங்களது நியாயமான வேண்டுதல்கள் அனைத்தும் உடனடியாகப் பலிக்கின்றது என்ற ஆழமான நம்பிக்கையின் காரணமாக, பெண்கள் ஆண்டுதோறும் தவறாமல் இதில் கலந்துகொள்கின்றனர்.

இதனால், ஒவ்வொரு ஆண்டும் இச்சிறப்பு பூஜையில் பங்கேற்கும் பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருவது குறிப்பிடத்தக்கது.

திடீரென மழை பெய்தாலும் பக்தர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அருகில் உள்ள மண்டபம் மற்றும் கோவில் வளாகத்தில் பிரம்மாண்ட பந்தல்கள் அமைத்து சிறப்பான வசதிகளை கோவில் கமிட்டியினர் செய்திருந்தனர். நிகழ்வின் நிறைவாக, இந்த ஆன்மீகச் சிறப்பு பூஜையில் கலந்து கொண்ட அனைத்துப் பெண்களுக்கும் கோவில் கமிட்டி சார்பாக கோட்டை ஸ்ரீ பத்திரகாளி ய ம் ம னின் பிரம்மாண்டமான திருவுருவப் படம் ஆசி வழங்கி நினைவளிப்பாக வழங்கப்பட்டது.



ஈரோடு, 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நேற்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதைசெலுத்தினார்.உடன்மாவட்டகாவல்கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.

# திருப்பூர் முத்துப்புதூர் நகராட்சி நடுநிலைபள்ளியில் இந்திய நாட்டின் 80வது சுதந்திர தின விழா கொடியேற்றப்பட்டது




திருப்பூர், ஆகஸ்ட்16 திருப்பூர்பழைய பேருந்து நிலையம் அருகில் முத்துப்புதுர்மாநகராட்சி நடுநிலைபள்ளியில் முன்னாள் மாணவர்கள் பெற்றோர் சங்க தலைவர் செல்வராஜ், லதா, எம். ஜி. எஸ் சையத், முன்னணியில் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். செல்வராஜ், சிவானந்தம், வெங்கடாசலம், சீனிவாசன், தொழிலதிபர்முத்து, தங்கவேலு ஆசிரியர், சதாசிவம்,மோகன்ராம், சரவணன், கனகராஜ், வேணி செல்வம்,மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி இனிப்புகளும் வழங்கினர். கலந்து கொண்ட அனைவருக்கும் இறுதியில் தலைமை ஆசிரியர் அன்புச்செல்வி நன்றி கூறினார்..

# மாங்கோடு ஊராட்சியில் சாலையை உடைத்து சேதம்; தவிக்கும் பொதுமக்கள் வீடியோ வைரல்



மார்த்தாண்டம்,ஆக.16 குமரி மாவட்டம் மாங்கோடு ஊராட்சி, வெட்டுகுழி பகுதியில் வசிப்பவர் விஜிலா குமாரி. இவரது நிலம் மற்றும் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் சுரேஷ், ஸ்டீவன்சன் ஆகியோரின் நிலங்களை பொதுபாதையையாக விட்டு கொடுத்தனர். இதையடுத்து மாங்கோடு ஊராட்சி சார்பில் ஒரு லட்சத்து எழுபதாயிரம் நிதி ஒதுக்கீடு செய்து ஊராட்சி சார்பில் சாலை பணி செய்யப்படு, பொது பாதை ஆக்கப்பட்டது. அப்போது திடீரென அந்த சாலையை இரண்டு நபர்கள் சேர்ந்து அடைத்து வைத்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் விஜிலகுமாரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நீதி மன்ற உத்தரவின் பெயரில் அடைத்து வந்திருந்த சாலை திறக்கப்பட்டு, அந்த பகுதியை சேர்ந்த 10க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த சாலையை பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் திடீரென திமுக பிரமுகர் ஒருவர் தலைமையில் ஒரு கும்பல் ஜேசிபி இயந்திரம் மற்றும் இரும்பு கம்பிகள்மூலம்அந்தசாலையை உடைத்துள்ளனர். இவர்கள் ஊராட்சி சாலையை உடைக்கும் காட்சிகள் சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகின்றது. இந்த நிலையில் இந்த பகுதி வழியை 1 0 மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்த முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதோடு மேலும் இந்த பகுதியை சேர்ந்தவர்களின் கார் உட்பட்ட வாகனங்களை வீடுகளை விட்டுவெளியேகொண்டு செல்ல முடியாத சூழ் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அரசு சாலையை உடைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு பொது சாலையை மீட்டு மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்

# இந்திய நாட்டின் 80வது சுதந்திர தின விழா கொடியேற்றம்!




திருப்பூர்,ஆக16 திருப்பூர் மாநகராட்சி 12வது வார்டு மகாலட்சுமி நகர் பகுதியில் 15 வேலம்பாளையம் மஜீத்தே இக்லாஸ் பள்ளி வாசல் சார்பாக இந்திய நாட்டின் 80 வது சுதந்திர தினவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது

கொடியேற்ற விழாவில் இமாம் மௌலானா ஆபிழ்ஹஜ்ரத், முகமது தஸ்லீம்,தலைவர் ஹாஜி ஜே. அப்துல் சமது, பொருளாளர் எம் .முகமது சித்திக், நிர்வாகப் பெருமக்களும், முகலாவாசிகள், மற்றும் மதரஸா மாணவர்கள் முன்னிலையிலும் மேலும் சிறப்பு விருந்தினராக சகோதரர் அருண் அவர்களும் கலந்து கொண்டு தேசியக்கொடி ஏற்றி அருகிலுள்ள பொதுமக்கள் அனைவருக்கும்இனிப்புகளை வழங்கி. சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டனர்..



# விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 80 வது சுதந்திர தின விழா

விளாத்திகுளம் ஆகஸ்ட் 16 தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 80 வது சுதந்திர தின விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் மூவர்ண கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.

இந்த நிகழ்வில் பள்ளியின் தலைமையாசிரியர் பொறுப்பு, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, திமுக ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, இம்மானுவேல், தூத்துக்குடி வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், வார்டு உறுப்பினர்கள், அறம் செய் அறக்கட்டளை நிர்வாகிகள், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள், மாணவ மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பணிபுரியும் மு..வேமசம்மா (பதிவுரு எழுத்தர்) நேற்று 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் சிறந்த சேவைக்காக விருது பெற்றார்.




# அரசுப்பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்கள்!!

திருப்பூர் மாவட்டம், சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு அரங்கில் இன்று (15.08.2026) நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே அரசுப்பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்கள்உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் (திருப்பூர் தெற்கு) எஸ். பாலமுருகன் (பல்லடம்) ராம்குமார் மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேஸ்வரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிரிஷ்டி சிங் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

# மேல்புறத்தில் தேசிய கொடியேந்தி நடைபயணம்; பா.ஜ.க சார்பில் நடந்தது




களியக்காவிளை, ஆக, 16 விடுதலை போராட்ட தியாகிகளின் தியாகத்தை குறிக்கும் வகையில் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட மேல்புறம், தெற்கு ஒன்றிய பா.ஜ.க சார்பில் தேசிய கொடி ஏந்தி நடைபயணம் நடந்தது.

களியக்காவிளை அருகே மூவோட்டுகோணத்தில் இருந்து துவங்கிய நடைபயணம் கண்ணுமாமுடு சந்திப்பில் நிறைவடைந்தது. இதில் மேல்புறம் தெற்கு ஒன்றிய தலைவர் சரவணவாஸ் நாராயணன் தலைமை வகித்தார். ஒன்றிய பொதுச்செயலாளர் சுரேஷ் குமார் பொருளாளர் கங்காதரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் ஒன்றிய தலைவர் பத்மஜகுமார் நடைபயணத்தை துவக்கி வைத்தார். ஒன்றிய துணைத் தலைவர்கள் ராஜேஷ், மோகன் தேவ், ஒன்றிய செயலாளர்கள் லதா, ஐயப்பன், முன்னாள் ஒன்றிய தலைவர் சுகுமாரன் உட்பட 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். மாவட்ட பிரச்சார பிரிவு துணைத் தலைவர் சுஜித்பாபு நடைபயணத்தை நிறைவு செய்தார்.a

# சிவகங்கை சுதந்திர தின விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஆட்சியர்



நாட்டின் 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு சிவகங்கையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான விழாவில், மாவட்ட ஆட்சியர் ஆகாஷ், தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 8 பயனாளிகளுக்கு ரூ.2.65 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

மேலும், காவல் துறையில் சிறப்பாக பணியாற்றிய 52 காவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி அவர்களின் சேவையை பாராட்டினார்.

அதேபோல், பல்வேறு அரசுத் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 74 அரசு அலுவலர்களுக்கு நற்சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள், காவல் துறை அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர். சுதந்திர தின விழா உற்சாகத்துடனும், தேசப்பற்று உணர்வுடனும் நடைபெற்றது.



சுதந்திரத் திருநாளை முன்னிட்டு அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை,அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகர்னா, இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# விளாத்திகுளத்தில் வீ த லீடர்ஸ் அமைப்பு சார்பில் 150 கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் விழா

விளாத்திகுளம் ஆகஸ்ட் 16. வீ த லீடர்ஸ் (We The Leaders) அமைப்பு சார்பில் தமிழகம் முழுவதும் 50 லட்சம் மரக்கன்றுகள் நடும் பசுமை இயக்கத்தின் ஒரு பகுதியாக, விளாத்திகுளம் அருகே பி. துரைசாமிபுரம் கிராமத்தில் 150க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.விழாவிற்கு கடம்பூர் அருண்ராஜா தலைமை தாங்கினார். காட்டு ராஜா, பொன்ராஜ், சுப்புராம், சரண்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் வேம்பு, புங்கை, மாமரம், சீதா, தென்னை, எலுமிச்சை, கொய்யா உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டன.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வெங்கடேஷ், ஊர் தலைவர் அருள்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர். இதில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு பசுமை பாதுகாப்பு குறித்த உறுதிமொழி ஏற்றனர்.

# பாலக்கோடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் சுதந்திர தின விழா



தருமபுரி ஆகஸ்ட் 16 தருமபுரி மாவட்டம் பாலக்கோடு கரகதஹள்ளி கிராம ஊராட்சி தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பூங்கா அருகில் 80 வது சுதந்திர தினவிழாவைமுன்னிட்டு பாலக்கோடு காவல் ஆய்வாளர் சுப்பிரமணியம் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். அது சமயம் தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொது மக்கள் மற்றும் மகாகவி பாரதியார் தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி மாநகராட்சி மத்திய அலுவலக வளாகத்தில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தேசிய கொடியினை ஏற்றி மரியாதை செலுத்தினார்.பின்னர் அனைவருக்கும் விடுதலை நாள் வாழ்த்துகளை தெரிவித்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் சிறப்பாக பணிபுரிந்த மாநகராட்சி அதிகாரிகள், அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள், தன்னார்வலர்கள், வணிக நிறுவனங்கள் ஆகியோருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினேன். உடன் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, துணை மேயர் ஜெனிட்டா , மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பத்திரிக்கையாளர்கள்,நண்பர்கள்மற்றும்துறைசார்ந்தஅலுவலர்கள்எனபலர்கலந்துகொண்டனர்.



# அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் சுதந்திர தின விழா

சிவகங்கை,இந்திய நாட்டின் என்பதாவது சுதந்திர தின விழா நாடுமுழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.தேசிய மாணவர்படை மாணவர்களின் அணிவகுப்புடன் துவங்கியது, கல்லூரி முதல்வர் வசந்தி தேவி தேசியக் கொடி ஏற்றி வைத்தார், கொடி பாடல் இசைக்கப்பட்டது, இதில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஒன்றியம், பாச்சல் கிராமத்தில் அமைந்துள்ள ஆயுதபடை காவலர் பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற 80 வது சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார். உடன் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் Dr.N.திருப்பதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, மாவட்ட வருவாய் அலுவலர் இரா. பாலசுப்ரமணியன் மற்றும் பலர் உள்ளனர்.

# புதுக்கடை அருகே பெண் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை

புதுக்கடை, ஆக. 16 புதுக்கடை அருகே பார்த்திபபுரம் பகுதியை சேர்ந்தவர் ரவீந்திரன் நாயர் (76). இவருக்கு ராகினி நாயர் (62) என்ற மனைவி இருந்தார். இவர்களுக்கு திருமணம் ஆன பின் இது வரையிலும் குழந்தைகள் இல்லை. இதனால் ராகினி நாயர் மிகுந்த மன வருத்தத்தில் இருந்து வந்தார். மேலும் அவர் நோய் வாய் பட்டு அவதிப்பட்டு வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களாக நித்திரவிளை பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.நேற்று காலை ரவீந்திரன் நாயர் கோயிலுக்கு சென்றிருந்தார். பின்னர் அவர் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் மாடியில் உள்ள படுக்கை அறையில்மின்விசிறியில் ராகினி நாயர் தூக்கிட்டு தொங்கி இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார். உடனடியாக இதுகுறித்து புதுக்கடை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




சுதந்திர தினத்தை முன்னிட்டு வேலூர் நேதாஜி மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப. அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் .மு.ம.வினோத் கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .ந.உ.சிவராமன். இ.கா.ப. மாவட்ட வருவாய் அலுவலர் மரு.து.சுரேஷ், ஆகியோர் உடனிருந்தனர்.

# தேனி மாவட்டத்தில் 80ஆவது சுதந்திர தின விழா: 160 பயனாளிகளுக்கு ரூ.2.30 கோடி நலத்திட்ட உதவிகள் வழங்கல்



தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் (15.08.2026) நடைபெற்ற 80 ஆவது சுதந்திர தினவிழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநான், இ.ஆ.ப., தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் மொழிபோர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து பரிசுப்பொருட்களை வழங்கி, பயனாளிகளுக்கு அரசுநலத்திட்ட உதவிகளையும், சிறப்பாக பணியாற்றிய காவலர்கள், அரசு அலுவலர்கள்/பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.எஸ்.பிரவீன்கௌதம் இ.கா.ப., முன்னிலை வகித்தார். மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து சிறப்பாக பணியாற்றிய 16 நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு கேடயங்களையும், சிறப்பாக பணிபுரிந்த காவல் துறை, நீதித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த மொத்தம் 269 அலுவலர்கள் / பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

# சென்னை ஜி.எஸ்.டி தணிக்கை அலுவலகத்தில் 80வது சுதந்திர தினவிழா கொண்டாட்டம்




சென்னை, ஆக 16, அண்ணாநகர் ஜி எஸ்.டி தணிக்கை 1 அலுவலகத்தில் 80வது சுதந்திர தின விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சென்னை ஜி.எஸ்.டி தணிக்கை 1 ஆணையர் எம்.ரமணா ரெட்டி, ஆணையர், கலந்து கொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்று தேசியக்கொடியை ஏற்றி வண்ண பலூன்களை பறக்கவிட்டார். உடன் சென்னை ஜிஎஸ்டி தணிக்கை 1, கூடுதல் ஆணையர் ஆர்.வி. பிரதமேஷ், உள்ளிட்ட அதிகாரிகள், அலுவலர்கள் குடும்பத்துடன் பங்கேற்றனர்.

# கிருஷ்ணகிரி விஜய் இன்ஸ்டியூட்டில் 80வது சுதந்திர தின விழா



கிருஷ்ணகிரி ஆக.16 நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு விஜய் இன்ஸ்டியூட் தாளாளர் துரை என்கிற துரை சாமி சுதந்திர தின வாழ்த்துகளைதெரிவித்துள்ளார். 80வது சுதந்திர தின விழாவிற்கு இன்ஸ்டியூட் இன் தாளாளர் துரை என்கிற துரைசாமி தலைமை தாங்கி மகாத்மா காந்தி படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இன்ஸ்டியூட்டில் முதல்வர் பிரியதர்ஷினி தேசிய கொடியேற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். தேசத்தின் ஒற்றுமை, வளர்ச்சி மற்றும் சமூகநீதி ஆகியவற்றை முன்னிறுத்தி இந்தியாவை மேலும் வலிமையான நாடாக கட்டமைக்க அனைவரும் ஒன்றுபட்டு உறுதியேற்க வேண்டும் எனவும், தியாகிகளின் வீரம், தீரம், தியாகத்தால் நமக்கு கிடைத்த வளமிகுநாட்டை போற்றி பாதுகாக்க வேண்டும் என அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என தாளாளர் தெரிவித்தார். ஆசிரியர் முகமது ஷெரீப், மற்றும் தமிழ்ச்செல்வன் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர். இவ்விழாவில் முதலாம் ஆண்டு சேர்ந்த டிகிரி மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் நித்யா மற்றும் குரு பிரசாத் சுதந்திர தின வாழ்த்துக்களை கூறி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஊராட்சியியை, பேரூராட்சியாக தரம் உயர்த்த கிராமசபை கூட்டத்தில் கோரிக்கை



சிவகங்கை ஆக 15, , சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் இன்று நடைபெற்றது. இந்தநிலையில் கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கல்லலில் நடைபெற்றது, இக் கூட்டத்திற்கு தனி அலுவலர் காலதாமதமாக வந்ததால் பரபரப்புடன் தொடங்கியது, இக் கூட்டத்தில் ஊராட்சி செயலர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் வைத்த நிலையில், சட்டமன்ற உறுப்பினர் குழந்தை நாச்சியார் கூட்டத்திற்கு வருகை தந்தார், அப்போது குடிநீர் குழாய் வழங்குவதற்கு முன்பு, குடிநீருக்கான ரசீது வழங்கப்பட்டது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது, அதற்கு ஊராட்சி செயலர் மழுப்பலாக பதில் அளித்த நிலையில், சட்டமன்ற உறுப்பினர் இது போன்று இனி ஒரு காலங்களில் நடைபெறாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி தெரிவித்தார், பின்னர் வாரச்சந்தையில் வழங்கப்படும் மகமை சீட்டில் வசூலிப்பவர் கையொப்பம் இல்லாததால் இது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது, அதற்கு ஊராட்சி செயலர் மழுப்பலான பதில் இருந்ததால், சட்டமன்ற உறுப்பினர் இனி வரும் காலங்களில் இது போன்று நடக்கக்கூடாது என எச்சரித்தார், பின்னர் தூய்மை பணியாளர் ஒருவர் தனக்கான நிலுவைத் தொகையினை பெறுவதற்கு ஊராட்சி செயலாளர்களிடம்கேட்டபோது, தனக்கு பண வழங்க வேண்டும் எனக் கேட்டு பணம் பெற்றதாக ஊராட்சி செயலர் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது, இதுகுறித்து சட்டமன்ற உறுப்பினர் கூறும் போது ,எங்கள் அரசில் லஞ்சத்திற்கு எதிரானது, அவ்வாறு ஊராட்சி செயலர் பணம் பெற்று இருந்தால், அதனை ஆதாரத்துடன் தெரிவித்தால், இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும் என தெரிவித்தார், இதற்கிடையில் கல்லல் ஊராட்சி இரண்டாக பிரிக்கப்பட போவதாக தகவல்கள் கிடைத்த நிலையில், கிராம சபை கூட்டத்தில் ஊராட்சியை இரண்டாக பிரிக்ககூடாது என்றும், பேரூராட்சியாக தரம் உயர்த்த வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டது, மேலும் பேருந்து நிலையம் அதே பகுதியில் அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது, இதுகுறித்து சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்றத்தில்எடுத்துரைத்து அதை கொண்டுவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி தெரிவித்தார், பல்வேறு காரசாரங்களுடன் கிராம சபை கூட்டம் இனிதே முடிவுற்றது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் பேரூராட்சி என்று கிடையாது குறிப்பிடத்தக்கது

# குழித்துறை வாவுபலி பொருட்காட்சியில் டிராகன் ரயில் பக்க காட்சியில் ஒரு பெட்டி கீழே விழுந்து 5 பேர் காயம்

## நேற்று மாலை பொருட்காட்சி மூடல்



மார்த்தாண்டம், ஆக. 16 குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 101வது வாவுபலி பொருட்காட்சி கடந்த 29 ம் தேதி ஆரம்பமாகி நாளை 17ம் தேதியோடு நிறைவடைகிறது. பக்க காட்சியை குழித்துறையைச் சேர்ந்த தொழிலதிபர் விஜயலால் 2 கோடியே 17 லட்சம் ரூபாய்க்கு முதல் முறையாக பிடித்தார். இதற்கும் மேலாக ஜிஎஸ்டி செலுத்த வேண்டும் அதற்கும் சேர்த்து மொத்தம் 2 கோடி 50 லட்சம் ரூபாய் செலுத்தி உள்ளார்.

பொருட்காட்சி திடலில் பக்க காட்சிகள் விதிகளுக்கு உட்பட்டு வைக்கப்படவில்லை என குற்றச்சாட்டு ஏற்கனவே உள்ளது. இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சுதந்திர தினத்தை முன்னிட்டு பொதுமக்கள் கூட்டம் அலைமோதியது.இதில் டிராகன் ரயில் பக்க காட்சி பொருட்காட்சி மைதானத்தில் இடது புறமாக வைக்கப்பட்டு இருந்தது அதில் ஆறு பெட்டி காணப்பட்டது. ஒரு பெட்டியில் 4 பேரை தான் ஏற்ற வேண்டும் ஒரு பெட்டியில் 6 பேரை ஏற்றி உள்ளார்.எதிர்பாராத விதமாக ஒரு பெட்டி கீழே விழுந்தது இதனால் கூடி இருந்த பொதுமக்கள் கூச்சலிட்டனர். உடனே தீயணைப்பு துறை ஊழியர்கள், போலீசார், பொதுமக்கள் வந்து முதலுதவி செய்தனர்.

பெட்டியிலிருந்த முழுக்கோட்டை சேர்ந்த ரிதீஷ் மகன் ஆரோன் (10) படுகாயம் அடைந்தார். இவரது கண் மற்றும் புருவம் காயம் ஏற்பட்டது. இதைப்போல் இவரது தங்கை ஆரோல் ( 4 ), அம்மா சிஞ்சு (39), இதே பகுதியைச் சேர்ந்த மகேஷ் (39), மகேஷ் மனைவி அனிஷா (29) ஆகியோர் காயமடைந்தனர். ஆரோலுக்கு காதிலும், சிஞ்சுக்கு காது மற்றும் கணுக்காலிலும், மகேஷ்க்கு இடுப்பிலும், அனிஷாவிற்கு காதிலும் காயம் ஏற்பட்டது

காயமடைந்தவர்களை தீயணைப்பு துறை அதிகாரி சந்திரன் தலைமையில் தீயணைப்பு வாகனத்தில் ஏற்றி கழுவன் திட்டை தனியார் ஆஸ்பத்திரி கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது. களியக்காவிளை போலீசார் இது தொடர்பாக விசாரித்து வருகின்றனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது இதனை தொடர்ந்து மாவட்ட எஸ்.பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் நேற்று மாலை 6 மணியிலிருந்து பொருட்காட்சி மூடப்பட்டது. பக்க காட்சி மற்றும் அனைத்து கடைகளும் மூடப்பட்டது பொருட்காட்சியை பார்க்க வந்த பொதுமக்களை போலீசார் திருப்பி அனுப்பினர்

### ஆம்புலன்ஸ் இல்லாத பொருட்காட்சி பாராட்ட வேண்டிய தீயணைப்பு துறை

பொருட்காட்சியில் திடலில் வழக்கமாக ஆம்புலன்ஸ் வசதி செய்யப்பட வேண்டும் ஆனால் இந்த ஆண்டு பொருட்காட்சி திடலில் சம்பவம் நடைபெறும் போது ஆம்புலன்ஸ் வசதி இல்லை.

இதனால் நேற்று நடந்த விபத்தில் காயம் அடைந்தவர்களை ஆஸ்பத்திரி கொண்டு செல்ல தவித்தனர். இந்த நிலையில் தீயணைப்பு துறை ஊழியர்கள் முன்வந்து உற்சாகமாகவும் காயம் அடைந்தவர்களை ஏற்றி ஆஸ்பத்திரி கொண்டு சென்றனர். தீயணைப்பு துறை அதிகாரிகளை பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.

# சிறப்பான முறையில் பணிபுரிந்த அரசு அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்!



திருப்பூர்,ஆக16 திருப்பூர் மாவட்டம், சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே சிறப்பான முறையில் பணிபுரிந்த அரசு அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உடன் சட்டமன்றஉறுப்பினர்கள்(திருப்பூர் தெற்கு) எஸ்.பாலமுருகன் (பல்லடம்) ராம்குமார் மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேஸ்வரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிரிஷ்டி சிங் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் சுகுமார், ஆகியோர் உள்ளனர்.

# அகஸ்தீஸ்வரம் ஞானதீபம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா




தென்தாமரைகுளம்., ஆகஸ்ட். 16 அகஸ்தீஸ்வரம் ஞானதீபம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 80வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவின்தொடக்கமாக மாணவர்கள் இறை வணக்கப் பாடல் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பாடினர். இந்திய இராணுவத்தில் கவுரவ சுபேதார் மேஜராக பணியாற்றி ஓய்வு பெற்ற முத்துக்குமார் கொடியேற்றி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பள்ளி மாணவர்கள் அணிவகுப்பு நடத்தி தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினர். Rஇந்நிகழ்ச்சியில் பள்ளியின் செயலாளர் மற்றும் தாளாளர் கே. எஸ். மணி , இந்திய மருத்துவ மையத்தின் இயக்குனர் சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கி கவுரவித்தனர் தொடர்ந்து பள்ளியின் முதல்வர் பாலசுந்தர் அறிமுக உரைநிகழ்த்தினார். .நெய்வேலி என். எல். சி நிறுவனத்தில் முதன்மை பொது மேலாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற பழநி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரை ஆற்

# சமூக சேவையை பாராட்டி கோபுரம் பவுண்டேஷன் அறக்கட்டளைக்கு நற்சான்றிதழ்



திருப்பூர்: சமூக நலனில் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வரும் கோபுரம் பவுண்டேஷன் அறக்கட்டளையின் சேவையை பாராட்டி, 80வது சுதந்திர தின விழாவில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் நற்சான்றிதழ் வழங்கினார்.

கோபுரம் பவுண்டேஷன் அறக்கட்டளை சார்பில் ஆதரவற்ற நிலையில் உயிரிழந்தவர்களின் உடல்களை உரிய முறையில் அடக்கம் செய்வது, தூய்மைக் காவலர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவது, மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு சமூகப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை ஆதரவற்ற 125 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், திருப்பூர், தஞ்சாவூர், சென்னை ஆகிய மூன்று மாவட்டங்களில் சுமார் 4,000 தூய்மைக் காவலர்களுக்கு உணவு, உடை மற்றும் காலணிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், உடுமலைப்பேட்டை மற்றும் தஞ்சாவூர் பகுதிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. சமூகத்தின் தேவைகளை உணர்ந்து, எந்தவித எதிர்பார்ப்புமின்றி தொடர்ந்து சேவை செய்து வரும் கோபுரம் பவுண்டேஷன் அறக்கட்டளையின் பணிகள் பொதுமக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுள்ள நிலையில், இந்த சேவையை அங்கீகரிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் சார்பில் நற்சான்றிதழ் வழங்கப்பட்டது.

இதுகுறித்து அறக்கட்டளையின் நிறுவனர் கோபுரம் கோவிந்தராஜ் மற்றும் தலைவர் முனைவர் தம்பிரான் ரிஷபானந்தர் ஆகியோர் கூறுகையில், “எங்களது சமூகப் பணிகளை அங்கீகரித்து மாவட்ட ஆட்சியர் நற்சான்றிதழ் வழங்கியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த அங்கீகாரம்எங்களது சேவைப் பணிகளை மேலும் சிறப்பாகவும், தொடர்ந்து செய்யவும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளது” என்றனர்.

# ராமநாதபுரம் ஆயுதப்படை மைதானத்தில் 80 வது சுதந்திர தின விழா கொண்டாட்டம்!




ராமநாதபுரம், ஆக.16 ராமநாதபுரம் மாவட்டம் காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகுரு பிரபாகரன் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக சமாதான புறாக்களை பரப்பி விட்டு சுதந்திர தின போராட்ட தியாகிகளின் வாரிசில் தாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து காவல் துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பின்னர் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய 79 காவல் துறை அலுவலர்கள், பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த 487 அலுவலர்கள் என மொத்தம் 566 அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் மூலம் ஒரு பயனாளிக்கு விபத்து நிவாரணம் ரூபாய் 2 லட்சம் மதிப்பீட்டிலும், இரண்டு பயனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமக் கிரியை உதவித்தொகை 70,000 மதிப்பீட்டிலும் ஒரு பயனாளிக்கு சக்கர நாற்காலி எட்டாயிரம் மதிப்பீட்டிலும் இரண்டு பயனாளிகளுக்கு எம் ஆர் கிட் ரூபாய் 12 ஆயிரத்து 264 மதிப்பீட்டிலும் ஒரு பயனாளிக்கு காதலிக்கருவி ரூபாய் 3 ஆயிரத்து 285 மதிப்பீட்டிலும் இரண்டு பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கேன் ஒளி பிரதிபலிக்கும் படிப்பு ஊன்றுகோல் ரூபாய் 5460 மதிப்பீட்டிலும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் 6 பயனாளிகளுக்கு மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் பரிசுபெற்றவர்கள் ரூபாய் 65 ஆயிரம் மதிப்பீட்டிலும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் மூன்று பயனாளிகளுக்கு மிகச் சிறந்த வங்கியாளருக்கு கேடயத்துடன் நற்சான்றிதழ் ரூபாய் 30,000 மதிப்பீட்டிலும் தொழிலாளர் நலத்துறையின் மூலம் 7 பயனாளிகளுக்கு தொழிலாளர் நல வாரிய ஓய்வூதியம் ரூபாய் ஒரு லட்சத்து 800 மதிப்பீட்டிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் 27 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழு கடன் ரூபாய் 27 லட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 53 பயனாளிகளுக்கு ரூபாய் 32 லட்சத்து 9 ஆயிரத்து 299 மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து அரசு மேல்நிலைப்பள்ளி ஆர் எஸ் மங்கலம், இளஞ்சம்பூர் அரசு உயர்நிலைப்பள்ளி, ராமநாதபுரம் செயின்ட் ஆண்ட்ரூஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, முத்துப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, தேசிய மாணவர் படை, இளம் செஞ்சிலுவை சங்கம், சாரண சாரணியர் இயக்கம் என மொத்தம் 831 மாணவ மாணவியர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பொதுமக்கள் ஏராளமான ஒரு பார்வையிட்டனர். இவ்விழாவில் ராமநாதபுரம் காவல்துறை துணைத் தலைவர் மணிவண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ், கூடுதல் ஆட்சியர் ( வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம், மாவட்ட வன உயிரின காப்பாளர் அகில் தம்பி, மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர நாராயணன் உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் மாணவ மாணவியர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தருவை விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெற்ற 80வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், தேசியகொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.சிவபிரசாத், மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# காவல்துறை மற்றும் சமூக ஆர்வலர்கள் இணைந்து போதைக்கு எதிராக விழிப்புணர்வு




இரணியல் ஆக 16 புதுக்குளம் பகுதியில் கோஸ்டல் போர்ட்ஸ் (கடற்கரை பறவைகள்) இளைஞர்களுடன் சமூக ஆர்வலர் ஜெமினிஷ் தலைமையில் எனக்கு வேண்டவே வேண்டாம் போதைப்பொருள் என்ற தலைப்பில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் குளச்சல் துணை காவல் கண்காணிப்பாளர் காந்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இன்றைய சூழ்நிலையில் போதை பொருட்கள் என்பது மனிதனை முற்றிலுமாக மாற்றி விடுகிறது. எனவே போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நாம் அனைவருக்கும் இருக்க வேண்டும். இந்த விழிப்புணர்வானது சமுதாயத்தைப் பாதுகாக்க மிகவும் அவசியமான ஒன்று. போதைப்பொருள் மனிதனின் மூளை, இதயம், மற்றும் சிறுநீரகம் பழுதாகி சீக்கிரம் மரணத்தை ஏற்படுத்துகிறது. அதோடு பயம், மனக்குழப்பம், மற்றும் தற்கொலை எண்ணங்களை தூண்டும் மன நலத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. மேலும் குடும்பத்தையும் முழுமையாக அழிக்கிறது. எனவே தமிழக அரசு மற்றும் பல்வேறு அமைப்புகள் இணைந்து "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ் நாடு" என்ற லட்சியத்துடன் தீவிர விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. ஆகவே போதைக்கு எதிராக இளைஞர்களும் பெரியவர்களும் அடிமையாகி விடாமல் விழிப்புடன் இருக்க வேண்டும், கஞ்சா மற்றும் பல போதைப் பொருள்களுக்கு யாராவது உங்களை கடாயப்படுத்தினால் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டு கொண்டார். நிகழ்ச்சியில் இரணியல் காவல் உதவி ஆய்வாளர் சேவியர் பிராங்லின் மற்றும் இரணியல் காவல் நிலைய அதிகாரிகள் ரெட்லின், ராஜேஷ் ராஜேஷ்குமார், மற்றும் கோஸ்டல் போர்ட்ஸ் இளைஞர் மன்றத்தினர் ஜெலஸ்டின் பாபு ஜெனிஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி நகராட்சியில் 80 வது சுதந்திர தின விழா



தருமபுரி ஆகஸ்ட் 15 தருமபுரி நகராட்சியில் 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நகர மன்றத் தலைவி லட்சுமி நாட்டான் மாது தலைமை தாங்கி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

கொடியேற்றத்தை தொடர்ந்து நகராட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தி உருவப்படத்திற்கு நகர மன்றத் தலைவி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகளை நினைவு கூறும் வகையில் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் விழாவில் கலந்து கொண்ட பொதுமக்கள், நகராட்சி ஊழியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்சியில் நகராட்சி ஆணையாளர், துணை தலைவர், கவுன்சிலர்கள், நகராட்சி அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தெற்கு ரயில்வே மதுரை கோட்டம் சார்பாக 80 ஆவது சுதந்திர தின விழா



தெற்கு ரயில்வே மதுரை கோட்டம் சார்பாக 80 ஆவது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா ரயில்வே காலனி செம்மண் திடலில் தேசிய கொடி ஏற்றிவைத்து ரயில்வே பாதுகாப்பு படை வீரர்கள், சாரண, சாரணியர், பள்ளி மாணவ, மாணவிகள் வழங்கிய அணிவகுப்பு மரியாதை ஏற்று கொண்டார் விழாவில் அவர் பேசும்போது, கடந்த நான்கு மாதங்களில் ஒட்டு மொத்த மதுரை கோட்ட ரயில்வே வருமானம் ரூபாய் 490.16 கோடியாக அதிகரித்துள்ளது என்றார். இது கடந்த ஆண்டை காட்டிலும் 8.28 சதவீதம் அதிகமாகும். அதேபோல பயணச்சீட்டு வருமானம் கடந்த ஆண்டை காட்டிலும் 13.34 சதவீதம் அதிகரித்து ரூபாய் 328.57 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும் சரக்கு போக்குவரத்து வருமானம் மற்றும் இதர வருமானங்கள் முறையே ரூபாய் 125.44 மற்றும் 11.64 கோடி ஈட்டப்பட்டுள்ளது. மதுரை கோட்டத்தில் 17 ரயில் நிலையங்கள் அம்ரித் பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ் ரூபாய் 292.52 கோடி செலவில் ஒரு சீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே இந்த திட்டத்தின் கீழ் காரைக்குடி, சோழவந்தான், மணப்பாறை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டு மார்ச் மாதம் முதல் பயணிகள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது பழனி, பரமக்குடி, அம்பாசமுத்திரம் ஆகிய ரயில் நிலையங்களில் மறுசீரமைப்பு பணிகள் நிறைவு பெற்று புதிய நவீன வசதிகளுடன் பயணிகள் பயன்பாட்டுக்கு தயாராக உள்ளது.

மதுரை ரயில் நிலையம் இரு நுழைவாயில்களுடன் மூன்று மாடி ரயில் நிலைய கட்டிடம், பெரியார் பேருந்து நிலையத்தை இணைக்கும் சுரங்கப் பாதை, ரயில் பாதை மேற்புற பகுதியில் 42 மீட்டர் அகல பயணிகள் தங்குமிடம், 37 மின் தூக்கிகள், 27 மின் ஏணிப்படிகள், நடை மேம்பாலங்கள், பல்லடுக்கு வாகன காப்பகங்கள், ஆகிய நவீன வசதிகளுடன் ரூபாய் 413 கோடி செலவில் மறு சீரமைப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

# 80வது சுதந்திர தின விழா குமரி மாவட்ட கலெக்டர் தேசியக்கொடியேற்றி ; ரூ.14.12 கோடி மதிப்பில் நல உதவிகள் வழங்கினார்



நாகர்கோவில், ஆக.16 இந்திய திருநாட்டின் 80 வது சுதந்திர தினத்தையொட்டி, நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டரங்க மைதானத்தில் நேற்று சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் நடந்தன. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், கலந்து கொண்டு, தேசியக்கொடியினை ஏற்றினார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் ஆகியோர் தேசியகொடிக்குமரியாதைசெலுத்தி, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர். பின்னர், சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வெண்புறாக்கள் மற்றும் வண்ண பலூன்களை பறக்கவிட்டார்கள்.

அதனைத்தொடர்ந்து அனைத்து துறைகளில் சிறப்பாக பணிபுரிந்த 400 அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் மொத்தம் 44 பயனாளிகளுக்கு ரூ.14.12 கோடி மதிப்பில் நலத் திட்ட உதவிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பயனாளிகளுக்கு வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து பல்வேறு துறைகளில் சாதித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

நிகழ்ச்சியில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், மாவட்ட வன அலுவலர் அன்பு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் இரா.ஐஸ்வர்யா, குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.லியோ டேவிட், சாகித்திய அகடாமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன், உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள், பணியாளர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




# டாக்டர்.ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியில் சுதந்திர தின விழா

கோவை ஆக:16 கோவை காரமடை, டாக்டர். ஆர். வி கலை அறிவியல் கல்லூரியில் நம் இந்திய நாட்டின் 80வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கல்லூரியின் அறங்காவலர் கோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர். சி.என். ரூபா தலைமை உரையாற்றினார். துணை முதல்வர் டாக்டர். சண்முகப்பிரியா அனைவரையும் வரவேற்றார்.

மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சுனில் ஆனந்த் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் கூறியதாவது, கல்லூரி மாணவர்கள் நல்ல புத்தகங்களைப் படித்து தமது திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். தேசப்பற்று என்பது வெறும் உணர்ச்சி அல்ல. தேசப்பற்று என்பது செயல். நாம் வாழும் இடத்தைத் தூய்மையாக வைத்திருப்பதும், சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதும் நமது கடமை. சட்டத்தை மதிப்பதும், சமூக நலனில் அக்கறையுடனும், நேர்மையானவர்களாகவும் இருப்பது அவசியம். பிறரின் உரிமைகளை மதித்து தமது திறமையால் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பாற்ற வேண்டும். அப்போதுதான் நமது தேசப்பற்று உண்மையானதாகும்.

தேசியக் கொடியை உயர்த்துவது மட்டும் தேசப்பற்று அல்ல. நாட்டின் நற்பெயரை உயர்த்துவதும் தேசப்பற்றே. இளைஞர்களின் செயலால் புதிய இந்தியா மலர வேண்டும் என்று மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து 'போதை இல்லாத தமிழகம்' என்ற கருத்தில் மௌனமொழி நாடகமும், மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் எஸ். என். ஆர். அறக்கட்டளையின் நிர்வாகச் செயலாளர் சீனிவாசன் அனைத்து துறைப் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிறைவாக துணை முதல்வர் டாக்டர். தேவப்பிரியா நன்றியுரை கூறினார்.

# குமரியில் 5 மணி நேரத்தில் 66 அடி உயர தமிழக முதல்வர் ஓவியம்

## அழிந்து வரும் ஓவிய கலையை காப்பாற்ற வலியுறுத்தி நடந்தது



நாகர்கோவில், ஆக.16 கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓவிய பயிற்சி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர் இணைந்து சுதந்திர தினத்தையொட்டி தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யின் 66 அடி உயர விழிப்புணர்வு ஓவியம் வரையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அரசு பள்ளிகளில் மற்ற பாடங்களை போன்று ஓவிய பாடங்களும் இருந்து வந்தது. 2 பிரிவுகளில் நடைபெற்ற இந்த பாடத்திட்டம் கடந்த 2017ம் ஆண்டு முதல் பள்ளிகளில் நிறுத்தப்பட்டது. ஓவிய கலை என்பது அனைத்து கலைகளுக்கும் முன்னோடி கலையாகும். எனவே இதை தமிழக முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்று, பள்ளிகளில் ஓவிய ஆசிரியர் நியமித்து ஓவியங்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும், அழிந்து வரும் ஓவிய கலையை பாதுகாக்க வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மார்த்தாண்டம் அருகே மாமூட்டுகடை ஆர்.பி.ஏ தனியார் பள்ளி மைதானத்தில் வைத்து தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யின் அலுவல் பட ஓவியம் 66அடி உயரம் 60அடி அகலத்தில் ஓவியத்தை வரைந்து ஓவிய கலை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதில் 139 ஓவிய பயிற்சி மாணவ மாணவிகள் மற்றும் பத்து ஆசிரியர்கள் சேர்ந்து ஐந்து மணி நேரத்தில் இந்த ஓவியத்தை வரைந்தனர்.

# 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு

## கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் காந்தியின் நினைவாக அமைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் திரு உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை




கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 16 கிருஷ்ணகிரி பழையப் பேட்டையில் மகாத்மா காந்தி வந்து உரையாற்றிய இடத்தில் அவரது நினைவாக காங்கிரஸ் கட்சி சார்பில் திரு உருவச் சிலை அமைக்கப்பட்டு உள்ளது. இன்று நாட்டின் 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் காந்தியின் திரு உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் எம். சி.ரகு தலைமை தாங்கினார்.

பின்னர் அங்கிருந்த தேசியக்கொடியினையும் ஏற்றி வைத்து மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்கள். அப்போது கிராம சீரமைப்பு கமிட்டி பொறுப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர்கள் பி.சி.சேகர், ரகமத்துல்லா, நகர தலைவர் லலித் ஆண்டனி, கவுன்சிலர் வினாயகம், முன்னாள் நகர தலைவர் வின்சென்ட், முன்னாள் வட்டார தலைவர் ஷானவாஸ், ரமேஸ்அர்னால்ட், பிரஸ்சரவணன், மாரியப்பன், பாண்டுரங்கன், குட்டி என்கின்ற விஜயராஜ் உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்துக் கொண்டு 80வது சுதந்திர தின விழா நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர திருநாள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மிகவும் சிறப்புடன் நடைப்பெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் தேசிய கொடியை ஏற்றி துவக்கிவைத்ததார். இதில் ஏராளமான பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், அரசுதுறை சார்ந்த அலுவலர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் பலர் கலந்துக்கொண்டு விழாவினை சிறப்பித்தனர். பள்ளி மாணவ மாணவியர் நடனம் மற்றும் கலைநிகழ்ச்சிகளால் சிறப்பித்தனர். பின்பு நிர்வாகத்திற்கு நற்பெயரை ஈட்டி தரும் வகையில் சிறப்பாக பணி புரிந்தமைக்காக மருத்துவர் திருமதி.பி.பிரியா ராஜன். மாவட்ட சுகாதார அலுவலர் திருவள்ளூர். அவர்களின் பணியினை பாராட்டும் வகையில் சான்றிதழ்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ச. கவிதா,இ,ஆ,ப., அவர்களால் வழங்கப்பட்டது

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.